தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6.

ந.க.எண்.999/சி1/இ1/2014 நாள். 09.06.2014.

......

பொருள் தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணி – 1.1.2014 ன்படி அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவிக்குப் பதவி உயர்வு மூலம் நியமனம் செய்தல் – உதவி தொடக்கக் கல்வி அலுவலர்களுக்க 3 விழுக்காடு பணியிடங்களை ஒதுக்கீடு செய்தல் – தகுதி வாய்ந்தோர் பட்டியல் வெளியிடுதல் – சார்ந்து.

பார்வை சென்னை–6, தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.4361/ஐ2/2014, நாள். 19.05.2014.

........

2014–15–ம் கல்வி ஆண்டிற்கான 1.1.2014 ன் நிலவரப்படி அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பட்டியல் ( 1 முதல் 24 முடிய ) இத்துடன் இணைத்து அனைத்து முதமைக்கல்வி அலுவலர்கள் / மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. இந்தப் பட்டியலை அவரவர்கள் ஆளுகைக்குட்பட்ட உதவி தொடக்க கல்வி அலுவலர்களுக்கு அனுப்பி சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்குத் தெரிவித்து, அதற்கான ஒப்புதலை உதவித் தொடக்க கல்வி அலுவலர்களிடமிருந்து பெற்று தங்களது அலுவலகக் கோப்பில் வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இப்பட்டியலில் இடம்பெற்றுள்ள உதவி தொடக்க கல்வி அலுவலர்களின் விவரங்கள் ஏதேனும் மாறுபட்டிருப்பினும் அல்லது விடுபட்டிருப்பினும் அன்னாரின் விண்ணப்பத்துடன், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலரின் மேலொப்பம் மற்றும் பரிந்துரையுடன் இயக்குநருக்கு ஒருவார காலத்திற்குள் அனுப்பிவைக்க அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: முன்னுரிமைப் பட்டியல்

**ஒம்/வி.சி.இராமேஸ்வரமுருகன்**
**பள்ளிக் கல்வி இயக்குநர்**

பெறுநர்
1.அனைத்து முதமைக்கல்வி அலுவலர்கள்
2.அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள்.
நகல்: தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6
தகவலின் பொருட்டு கனிவுடன் அனுப்பலாகிறது.

www.teachertn.com

www.teachertn.com